**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 96/2021 PW .2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நவீன்குமார் | தந்தை/கணவர் பெயர்: விஜயகுமார் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of06.04.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>06.04.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது முறையூரில் குடியிருந்து ஜீஸ் கடை , எலட்ரிக் கடை வைத்து வருகிறேன். அ.சா. 1 யை தெரியும். எனது பக்கத்து வீட்டுகாரர். எதிரியைத் தெரியும். எனக்கு தெரிந்தவர். கடந்த 06.07.2021ம் தேதி மாலை 06.40 மணியளவில் அ.சா.1 இரு சக்கர வாகனத்தில் என்னை எனது வீட்டிற்கு கொண்டு வந்து விட்டுவிட்டு சென்று விட்டார். சுமார் 10 நிமிடம் கழித்து அ.சா.1 எனக்கு போன் செய்தார். அவர் போன்செய்த வுடன் நான் அண்ணாநகருக்கு சென்றேன். எதிரே மீனாட்சிசுந்தரம் வந்தார்.

2. நான் சென்று பார்த்த போது அ.சா.1க்கு மூக்கு, இடது கையில் இரத்த காயம் ஏற்பட்டு இருந்தது. மீனாட்சி சுந்தரம் கட்டை கம்பால் அ .சா.1யை அடித்தையும் பார்த்தேன். அடித்துவிட்டு எனக்கு எதிரே சென்றதையும் நான் நேரடியாக பார்த்தேன். நான் இரு சக்கர வாகனத்தில் அ .சா1யை எஸ்.வி மங்கலம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன். போலீசார் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள்.

3. நான் அ.சா.1யை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். அங்கே வந்த போலீசார் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி

கையொப்பம் என்னுடையது. **(அந்த சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

5. எதிரி ஆஜரில்லை. எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.